DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 03/2025 |
| Deposition of witness | : | P. W – 1 |
| Name | : | மூவேந்தன் |
| Father's /Husband Name | : | கிருஷ்ணமூர்த்தி |
| Village | : | நன்னிலம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 38 |
| Occupation | : | கார் ஓட்டுனர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 09th day April 2025.
Accused A1 to A3 present.

**முதல் விசாரணை :–**

கடந்த 2024–ம் வருடம் 10–வது மாதம் 31–ம் தேதி தீபாவளி அன்று மாலை சுமார் 06.00 மணியளவில் நன்னிலம் கச்சேரி தெரு கால்நடை மருத்துவமனை அருகே எனது அண்ணன் திலக் என்பவரின் சட்டையை பிடித்து எதிரிகள் பிரச்சனை செய்து கொண்டிருந்தார்கள் அதை நான் கேட்டபோது ஆஜர் எதிரிகள் என்னை கொச்சை வார்த்தைகளால் குச்சிகாரி மவனே, தேவுடியா மவனே என்று பொது இடத்தில் அசிங்கமாக திட்டினார்கள் அதனால் எனக்கு அவமானம் ஏற்பட்டது. அவ்வாறு திட்டியபிறகு எதிரி சீனிவாசன் என்னை அவர் கையில் வைத்திருந்த பில் அருவாளால் எனது உடல் முழுவதும் தாக்கினார். அதில் எனக்கு உடலில் பல இடங்களில் காயம் ஏற்பட்டது. (சாட்சி தனது காயங்களை காண்பித்து சாட்சியமளிக்கிறார். அவரது உடம்பில் வயிற்று பகுதியில் சுமார் பத்து செ.மீ நீளமுடைய காயத்தழும்பையும், நெஞ்சு பகுதியில் வட்டமான காயத்தழும்பையும், முதுகு பகுதியில் சுமார் 15 செ.மீ அளவுடைய ஒரு நீளமான காயத்தழும்பையும், வலது கை நடுவிரலில் உள்ள காயத்தழும்பையும், வலது காலில் உள்ள காயங்களையும் காட்டி சாட்சியமளிக்கிறார்.) 1–ம் எதிரி சீனிவாசன் என்னை அவ்வாறு வெட்டியதில் எனது உடலில் காயங்கள் ஏற்பட்டு ரத்தம் வடிந்தது. மற்ற 2, 3 எதிரிகள் இருவரும் சம்பவ இடத்தில் இருந்து என்னை மிரட்டினார்கள். அவ்வாறு தாக்கிவிட்டு 1–ம் எதிரி சீனிவாசன் கையில் அருவாளை வைத்துக்கொண்டு என்னை மிரட்டினார். அதனால் எனக்கு பதற்றம் பயம் ஏற்பட்டது. பிறகு, என்னை அழைத்து செல்வதற்காக வந்த ஆம்புலன்ஸ்ல் என்னை எதிரிகள் ஏர விடவில்லை. பிறகு ஊர் மக்கள் தான் என்னை ஆம்புலன்ஸ் ஏற்றி நன்னிலம் அரசு

மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். அங்கு எனக்கு ரத்த போக்கு அதிகமாக இருந்த காரணத்தினாலும், அதிக மேல்சிகிச்சை தேவைபடுவதால் என்னை நன்னிலம் மருத்துவமனையிலிருந்து திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் அங்கு சிகிச்சையில் இருந்த போது போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான் அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பில் பொதுவான குறுக்கு விசாரணை:–**</u>

இதே சம்பவத்தின் போது நான், திலக், செந்தமிழன் ஆகியோர்கள் எதிரிகளை அடித்துவிட்டதாக எங்கள் மீதும் எதிர் வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். பிரச்சனைக்கு காரணம் என்னவென்றால் எனது அண்ணனுக்கும், 1–ம் எதிரிக்கும் ஏற்பட்ட குளத்தில் மண் எடுப்பது தொடர்பான பிரச்சனை தான் காரணம். அந்த காரணத்தை நான் புகார் வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் போலிசார் கேட்காததால் கூறவில்லை. என்னை எதனால் தாக்கினார் என்றால் பில் அருவாளால் தாக்கினார். எனது மது அருந்தும் பழக்கம் உண்டு என்றால் எப்போதாவது மது அருந்துவேன். சம்பவத்தின் போது மது அருந்தி இருந்தேன் என்றால் சளிக்காக கொஞ்சம் அருந்தியிருந்தேன். நான், திலக், செந்தமிழ் ஆகியோர் தான் மது அருந்தி எதிரியிடம் பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் மூன்று பேரும் எதிரிகளை தாக்கியபோது தான் எனது உடம்பில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. போலிசார் என்னை மருத்துவமனையில் இருந்த போது விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். வாக்குமூலம் வாங்கியபிறகு மீண்டும் விசாரித்தார்களா என்றால் இல்லை. போலிசாரிம் அளித்த வாக்குமூலத்தில் காயத்தின் அளவை குறிப்பிட்டு வாக்குமூலம் அளித்தேனா என்றால் இல்லை. எனக்கு வயிற்றில் எத்தனை செ.மீ நீளத்திற்கு வெட்டு காயம் உள்ளது என்றால் ஒரு வெட்டு சுமார் நான்கு இஞ்ச், இன்னொரு வெட்டு சுமார் மூன்று இஞ்ச், இன்னொரு ஐந்து இஞ்ச் ஆகிய அளவுகள் எனக்கு தெரியும். செ.மீ அளவு சரியாக சொல்ல தெரியாது. புகாரில் சம்பவத்தை யார் யார் பார்த்தார்கள் என்று குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் போலிசார் கேட்காததால் கூறவில்லை. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும், எதிரிகளுக்கும் தொடர்பில்லை

என்றால் சரியல்ல. நான், திலக் செந்தமிழ் ஆகிய மூவரும் சேர்ந்து எதிரிகளை தாக்கியபொழுது தான் நான் கீழே விழுந்து அதில் எனக்கு காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் பொய் புகார் அளித்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும், எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 03/2025 |
| Deposition of witness | : | P. W – 2 |
| Name | : | திலக் |
| Father's /Husband Name | : | கிருஷ்ணமூர்த்தி |
| Village | : | நன்னிலம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 45 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 09th day April 2025.
Accused A1 to A3 present.

**முதல் விசாரணை :–**

கடந்த 2024–ம் வருடம் 10–வது மாதம் 31–ம் தேதி தீபாவளி அன்று மாலை சுமார் 06.00 மணியளவில் நன்னிலம் கச்சேரி தெரு கால்நடை மருத்துவமனை அருகே எனது அண்ணன் திலக் என்பவரின் சட்டையை பிடித்து எதிரிகள் பிரச்சனை செய்து கொண்டிருந்தார்கள் அதை நான் கேட்டபோது ஆஜர் எதிரிகள் என்னை கொச்சை வார்த்தைகளால் குச்சிகாரி மவனே, தேவுடியா மவனே என்று பொது இடத்தில் அசிங்கமாக திட்டினார்கள் அதனால் எனக்கு அவமானம் ஏற்பட்டது. அவ்வாறு திட்டியபிறகு எதிரி சீனிவாசன் என்னை அவர் கையில் வைத்திருந்த பில் அருவாளால் எனது உடல் முழுவதும் தாக்கினார். அதில் எனக்கு உடலில் பல இடங்களில் காயம் ஏற்பட்டது. (சாட்சி தனது காயங்களை காண்பித்து சாட்சியமளிக்கிறார். அவரது உடம்பில் வயிற்று பகுதியில் சுமார் பத்து செ.மீ நீளமுடைய காயத்தழும்பையும், நெஞ்சு பகுதியில் வட்டமான காயத்தழும்பையும், முதுகு பகுதியில் சுமார் 15 செ.மீ அளவுடைய ஒரு நீளமான காயத்தழும்பையும், வலது கை நடுவிரலில் உள்ள காயத்தழும்பையும், வலது காலில் உள்ள காயங்களையும் காட்டி சாட்சியமளிக்கிறார்.) 1–ம் எதிரி சீனிவாசன் என்னை அவ்வாறு வெட்டியதில் எனது உடலில் காயங்கள் ஏற்பட்டு ரத்தம் வடிந்தது. மற்ற 2, 3 எதிரிகள் இருவரும் சம்பவ இடத்தில் இருந்து என்னை மிரட்டினார்கள். அவ்வாறு தாக்கிவிட்டு 1–ம் எதிரி சீனிவாசன் கையில் அருவாளை வைத்துக்கொண்டு என்னை மிரட்டினார். அதனால் எனக்கு பதற்றம் பயம் ஏற்பட்டது. பிறகு, என்னை அழைத்து செல்வதற்காக வந்த ஆம்புலன்ஸ்ல் என்னை எதிரிகள் ஏர விடவில்லை. பிறகு ஊர் மக்கள் தான் என்னை ஆம்புலன்ஸ் ஏற்றி நன்னிலம் அரசு

மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். அங்கு எனக்கு ரத்த போக்கு அதிகமாக இருந்த காரணத்தினாலும், அதிக மேல்சிகிச்சை தேவைபடுவதால் என்னை நன்னிலம் மருத்துவமனையிலிருந்து திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் அங்கு சிகிச்சையில் இருந்த போது போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான் அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் பொதுவான குறுக்கு விசாரணை:–</u>

இதே சம்பவத்தின் போது நான், திலக், செந்தமிழன் ஆகியோர்கள் எதிரிகளை அடித்துவிட்டதாக எங்கள் மீதும் எதிர் வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். பிரச்சனைக்கு காரணம் என்னவென்றால் எனது அண்ணனுக்கும், 1–ம் எதிரிக்கும் ஏற்பட்ட குளத்தில் மண் எடுப்பது தொடர்பான பிரச்சனை தான் காரணம். அந்த காரணத்தை நான் புகார் வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் போலிசார் கேட்காததால் கூறவில்லை. என்னை எதனால் தாக்கினார் என்றால் பில் அருவாளால் தாக்கினார். எனது மது அருந்தும் பழக்கம் உண்டு என்றால் எப்போதாவது மது அருந்துவேன். சம்பவத்தின் போது மது அருந்தி இருந்தேன் என்றால் சளிக்காக கொஞ்சம் அருந்தியிருந்தேன். நான், திலக், செந்தமிழ் ஆகியோர் தான் மது அருந்தி எதிரியிடம் பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் மூன்று பேரும் எதிரிகளை தாக்கியபோது தான் எனது உடம்பில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. போலிசார் என்னை மருத்துவமனையில் இருந்த போது விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். வாக்குமூலம் வாங்கியபிறகு மீண்டும் விசாரித்தார்களா என்றால் இல்லை. போலிசாரிம் அளித்த வாக்குமூலத்தில் காயத்தின் அளவை குறிப்பிட்டு வாக்குமூலம் அளித்தேனா என்றால் இல்லை. எனக்கு வயிற்றில் எத்தனை செ.மீ நீளத்திற்கு வெட்டு காயம் உள்ளது என்றால் ஒரு வெட்டு சுமார் நான்கு இஞ்ச், இன்னொரு வெட்டு சுமார் மூன்று இஞ்ச், இன்னொரு ஐந்து இஞ்ச் ஆகிய அளவுகள் எனக்கு தெரியும். செ.மீ அளவு சரியாக சொல்ல தெரியாது. புகாரில் சம்பவத்தை யார் யார் பார்த்தார்கள் என்று குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் போலிசார் கேட்காததால் கூறவில்லை. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும், எதிரிகளுக்கும் தொடர்பில்லை

என்றால் சரியல்ல. நான், திலக் செந்தமிழ் ஆகிய மூவரும் சேர்ந்து எதிரிகளை தாக்கியபொழுது தான் நான் கீழே விழுந்து அதில் எனக்கு காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் பொய் புகார் அளித்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும், எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 03/2025 |
| Deposition of witness | : | P. W – 3 |
| Name | : | செந்தமிழன் |
| Father's /Husband Name | : | வீரையன் |
| Village | : | நன்னிலம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 47 |
| Occupation | : | வெல்டர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 09th day April 2025.
Accused A1 to A3 present.

**முதல் விசாரணை :–**

கடந்த 31.10.2024–ம் தேதி மாலை சுமார் 6 மணியளவில் நான் கச்சேரி தெருவிலுள்ள கால்நடை மருத்துவமனை அருகே அ.சா. 2 திலக் இருந்தபோது அவரிடம் எதிரிகள் பிரச்சனை செய்தார்கள். அதைப் பார்த்து அ.சா. 1 மூவேந்தன் கேட்டார். அதற்கு ஆஜர் எதிரிகள் மூன்று பேரும் அ.சா. 1 ஐ குச்சிக்காரி மகனே, தேவுடியா மவனே என்று கொச்சையான வார்த்தைகளால் திட்டினார்கள். பிறகு அ.சா. 1 ஐ 1 ம் எதிரி அவர் வைத்திருந்த பில் அருவாளால் அ.சா. 1 ஐ அவரது உடம்பில் ஆங்காங்கே வெட்டினார். அதில் அவருக்கு பல இடங்களில் காயம் ஏற்பட்டு இரத்தம் வழிந்தது. பிறகு ஆஜர் எதிரிகள் அ.சா. 1 ஐ உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி சென்றார்கள். காயம் அடைந்த அ.சா. 1 ஐ முதலில் நன்னிலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்று பின்பு அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். சம்பவம் தொடர்பாக அ.சா.1 புகார் அளித்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் பொதுவான குறுக்கு விசாரணை:–**

இதே வழக்கு சம்பவத்திற்கு எதிர் வழக்காக என் மீதும் திலக் மீதும், அ.சா. 1 ன் மீதும் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். போலிசார் இவ்வழக்கு தொடர்பாக என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். போலிசாரிடம் சம்பவத்திற்கான முன்விரோதத்தினை சொன்னேனா என்றால் இல்லை. அ.சா. 1 மற்றும் எனக்கு மது அருந்தும் பழக்கம் உண்டா என்றால் எப்போதாவது அருந்துவோம். நான் திலக், அ.சா. 1 மூவேந்தன் ஆகியோர் தான் எதிரிகளிடம் மதுபோதையில்

பிரச்சனையில் ஈடுபட்டோம் என்றால் சரியல்ல. நாங்கள் மூன்று பேரும் எதிரிகளை தாக்கியபோது நாங்கள் எங்களுக்குள்ளாக தாக்கி அதில் அ.சா. 1 க்கு காயம் ஏற்பட்து என்றால் சரியல்ல. எதிரிகளை நாங்கள் தாக்கிவிட்டு அதிலிருந்து தப்பிப்பதற்காக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல, நாங்கள் எதிரிகளை தாக்கவில்லை. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.